விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 040 வள்ளுவர் ஆண்டு 2054 தை 14 சனிக்கிழமை (28.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### ஆணைக்குழு உறுப்பினர் பதவி விலகியமை

# உள்ளூராட்சித் தேர்தலை நிறுத்துவதற்கான சதித்திட்டமே

### பஃவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அதன் உறுப்பினரொருவர் பதவியை இராஜினாமா செய்தமை பொருத்தமற்றது. ஏதேனுமொரு வகையில் தேர்தலை நிறுத்துவதற்கான சதித் திட்டமாகவே நாம் 11

# நாய்க்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் மரணம்

### ஆனைக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நாய்க்கடிக்கு இலக்கான இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுந்தரலிங்கம் சுதர்ச்ன் (வயது-33) என்ற குடும்பஸ்தரே மரணமடைந்தவராவார்.

குறித்த நபருக்கு 6 மாதங்களுக்கு முன் நாய் கடித்துள்ளது. எனினும் அவர் நாய்க் கடிக்கு உரிய முறையில் சிகிச்சை 11

### 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த

# ஜனாதிபதி ரணிலுக்கு உரிமை கிடையாது

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



(கொழும்பு)

*அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவும் அரச வளங்களைத் தனியார் மயப்படுத்தவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தார்மீக உரிமை கிடையாது. ஏனெனில் அவர் மக்கள் பிரதிநிதியல்ல. மக்களாணை இல்லாத பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.*

*(11ஆம் பக்கம் பார்க்க)*

# பாராளுமன்ற கூட்டத் தொடர் ஒத்திவைப்பு

### பெப்ரவரி 8ஆம் திகதி மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை நேற்று நள்ளிரவுடன் ஒத்திவைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் 11

### வளர்ப்பு நாயை மீட்க

# கிணற்றுக்குள் இறங்கிய இளைஞன் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

வளர்ப்பு நாயை மீட்பதற்காக கிணற்றுக்குள் இறங்கிய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி உதயநகர்ப் பகுதியில் நேற்றுக் காலை இச் 11

# ஜனாதிபதிக்கு எதிராக யாழில் ஆர்ப்பாட்டம்

### மேலும் இருவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

தேசிய பொங்கல் தினமன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்.விஜயத்தின் போது எதிர்ப்பு போராட்டத்தில்கலந்து கொண் 11

# யாழ்.பல்கலைக்கழகப் பேரவைக்கு மேலும் 5 உறுப்பினர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகப் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்களாக மேலும் 5 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களாகப் பதவி வகித்தவர்களின் பதவிக் காலம் கடந்த 15ஆம் திகதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 16ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டு காலத்துக்கு 9 வெளிவாரி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்னர் மேலும் 5 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று பல்கலைக் 11

# பெரியவிளானில் இளைஞன் அடித்துப் படுகொலை

### 17, 20 வயதுகளையுடைய இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இளவாலை பெரியவிளானில் இளைஞன் ஒருவர்அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த நிரோஜன் (வயது-29) என்ற இளைஞனே கொலை செய்யப்பட்டவராவார். 11

### பால் புரைக்கேறியதில்

# ஒரு மாத ஆண் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

தாய்ப்பால் புரைக் கேறியதில் ஒரு 11

### காணாமலாக்கப்பட்டோர் சங்க

# செயலாளர் வீட்டில் மீது கழிவொயில் வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்ட வலிந்து காணமலாக்கப்பட்டோர் சங்க செயலாளர் ஜெனிற்றாவின் வீட்டின் மீது நேற்று முன்தினம் அதிகாலை கழிவொயில் வீசப்பட்டுள்ளது.

கழிவொயில் வீச்சிற்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமது கடுமையான கண்டனங்களை வெளியிட்டுள்ளது. (ம-7,104)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீற்றர் வட்டி விவகாரம் மேலும் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழில் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் விவகாரத்தில் மேலும் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீற்றர் வட்டிக்கு பணத்தினை வாங்கியவர்களை தாக்கும் காணொளிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்த நிலையில் பரபரப்பு ஏற்பட்டது.

அதனையடுத்து தாக்குதலை மேற்கொள்பவர்களை உடனடியாக கைது செய்யுமாறு வடக்குமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் உத்தரவை பிறப்பித்திருந்தார்.

அந்தவகையில் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் ஒருவரும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சுன்னாகம் பொலிஸாரால் இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

# வசந்த முதலிகே பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே, ஒரு வழக்கில் இருந்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் காலி முகத்திடல் பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த வழக்கில் இருந்தே வசந்த முதலிகே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய, அவரை 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது. (ம-7)

# ஒரு மாதத்திற்கு மேல் நிலுவை மின் இணைப்பு துண்டிக்கப்படும்


## யாழ். மாவட்ட மின் பாவனையாளர்களுக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட மின்சார பாவனையாளர்களில் ஒரு மாதத்துக்கு மேல் மின்சார கட்டணம் நிலுவையாக உள்ளவர்களின் மின் இணைப்பு எதிர்வரும் வாரங்களில் துண்டிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சாரசபையின் யாழ். தல்லைமை பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

துண்டிக்கப்படும் சந்தர்ப்பத்தில் 3 ஆயிரத்து 250 ரூபாய்மீள் இணைப்பு கட்டணம் அறவிடப்படுவதோடு, 6 மாத காலத்துக்கு மேலாக மின் துண்டிப்பு செய்யப்படும் நிலுவை செலுத்தப்படாத பாவனையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மின்சார கட்டணம் செலுத்தாது நிலுவை உள்ள பாவனையாளர்கள் உடனடியாக மின்சார கட்டண நிலுவையை செலுத்தி மின்சார துண்டிப்பை தவிர்க்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)





யாழ்.வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோவில்) மஹாகும்பாபிஷேகம் நேற்றுக் காலை வெகுவிமர்சையாக நடந்தேறியது. (ம-7)


மணிவிழா தம்பதியினரை மனதார வாழ்த்துகின்றோம்



திரு. கிருஸ்ணபிள்ளை பத்மகாந்தன்
திருமதி. குகமலர் பத்மகாந்தன்

அறுபதாம் அகவைதனில் தடம்பதித்து
அரசபணிதனையே தன்னிறைவாய் புரிந்திட்ட
தளராத மனங்கொண்ட தம்பதியினராம்
உம்மை நாமும் அன்புடனே
வாழ்த்துகின்றோம் என்றென்றும்
வாழி! வாழி!

வாழ்த்துவோர்
திரு. கி.பரமதாஸ் (ஆசையண்ணா குடும்பத்தினர்)
மாலிசந்தி கரவெட்டி


## மனித உரிமைகள் ஆணைக்குழுவினர்

# மின்சக்தி அமைச்சின் அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல்

## எரிசக்தி அமைச்சர் கஞ்சன

(கொழும்பு)
மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனான கலந்துரையாடலில்கலந்து கொண்ட இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் இருவருக்கு, 2 ஆவணங்களில் கையொப்பமிடுமாறு வற்புறுத்தப்பட்டதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சின் செயலாளர் இவ்விடயத்தை தனக்கு அறியப்படுத்தியதாக, அமைச்சர் டுவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

ஆவணத்தில் கையொப்பமிட உடன்படவில்லையாயின் சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு [illegible] அதிகாரிகள் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் ஏற்கனவே சட்ட ஆலோசனை பெற்றுவருவதாகவும் நடந்த நிகழ்வுகளை எழுத்து பூர்வமாக சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் காலை ஜனாதிபதிக்கு இவ்விடயத்தை அறிவித்துள்ளதாக குறிப்பிடும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர, அரசியலமைப்பு பேரவைக்கும் எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளதாகவும் தமது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (ம-7)


கண்ணீர் அஞ்சலி



எமது நண்பி திருமதி
கருணாவதி தேவதாசன்
அவர்களின் அன்புத்
தந்தையார்

திரு வேலுப்பிள்ளை
கனகரத்தினம்

அவர்களின் மறைவுச்
செய்தி அறிந்து எமது
கண்ணீர் அஞ்சலியை
செலுத்துகின்றோம்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
3ஆம் அணி நட்புக்கள்

(C-5859)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப் இன் கடின கோரிக்கைகள்;
# நிதியைப் பெற நிறைவேற்றுவதே ஒரே வழி

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**சர்வதேச நாணயநிதியத்தால் முன்வைக்கப் பட்டுள்ள கோரிக்கைகள் கடினமாக இருந்தாலும் நிதியுதவியை பெறுவதற்கு இதுவே மார்க்கம் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

தெற்காசிய நாடுகளுக்கான, சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கை சர்வதேச நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியை பெறுவதற்கு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தது.

குறித்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் பல நிதிச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதுடன், சர்வதேச நாடுகள் மற்றும் அதன் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைகளையும் தொடர்ந்த வண்ணம் உள்ளது.



இந்த நிலையில், இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள குறித்த நிதித்துறை சீர்திருத்தங்களை வரவேற்றுள்ள சர்வதேச நாணயநிதியம், மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே நிதித்துறையில் புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் சட்டங்களை கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாகவும் அரச நிறுவனங்களை சீர்திருத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனுக்கு தெரிவிக்கப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க் தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையின் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க உலக சுகாதார ஸ்தாபனம் தலையிட வேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை எதிர்கொண்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலையிட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சு உட்பட அதிகாரிகளிற்கு அவசியமான அழுத்தங்களை உலக சுகாதார ஸ்தாபனம் கொடுக்க வேண்டும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி குறித்து நாங்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதிக்கும் சுகாதார அமைச்சருக்கும் தெரிவித்து வந்துள்ளோம்.

தாங்க முடியாத அளவிற்கு மருந்துப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மருந்துகளை கொள்வனவு செய்வதில் பல முறைகேடுகள், ஊழல்கள் இடம்பெறுகின்றன.

நோயாளிகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை உரிய அதிகாரிகளிற்கு தெரிவிப்பதன் மூலம் தீர்வை காணமுடியாது என்பதை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உணர்ந்துள்ளது.


இதன் காரணமாகவே உலக சுகாதார ஸ்தாபனத்தை நாட தீர்மானித்துள்ளோம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். (நி)

# மூன்று மாதங்களில் மின்சாரசபைக்கு 108 பில்லியன் ரூபாய் வருமானம்

## சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய கட்டண முறை அமுல்படுத்தப்பட்ட முதல் மூன்று மாதங்களில் மின்சார சபைக்கு 108 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிதி நெருக்கடி மற்றும் நட்டம் காரணமாக தொடர்ந்து மின்சார விநியோகத்தை வழங்க முடியாது என்ற கூற்றினை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# வரிக்கொள்கையினை நிறுத்துமாறு கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



(மட்டக்களப்பு)

அரசாங்கம் முன்னெடுத்துள்ள புதிய வரிக்கொள்கையினை நிறுத்துமாறு கோரி அரசாங்க ஊழியர்களால் மட்டக்களப்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம், கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் என்பன இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தன. (நி)

## வீட்டில் திடீர் தீ விபத்து

# உறக்கத்தில் இருந்த தாயும் பிள்ளைகளும் உயிரிழப்பு

## அநுராதபுரத்தில் துயரச் சம்பவம்

(கொழும்பு)

அநுராதபுரம் - அலையாபத்து - மாங்கடவளையில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் தாயொருவரும் இரண்டு பிள்ளைகளும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இவர்கள் உறங்கிக் கொண்டிருந்த அறையில் இவ்வாறு தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் ஐந்து வயது சிறுவனும் பத்து வயது சிறுமி ஒருவரும் 30 வயதுடைய தாயொருவருமே உயிரிழந்துள்ளனர்.

பிள்ளைகளையும் மனைவியையும் காப்பாற்றச் சென்ற 37 வயதுடைய கணவர், தீக்காயங்களுடன் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அருகில் உள்ள வீடொன்றிலிருந்து குறித்த வீட்டுக்கு மின்சாரம் பெறப்பட்டுள்ளதாகவும் தீ விபத்துக்கான காரணம் கண்டறிய முடியவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# இலங்கையின் பொருளாதாரம் நிலைத்திருக்க இந்தியாவே காரணம்-மிலிந்த மொரக்கொட

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியின் போது இந்தியாவின் ஆதரவு, அண்டை நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது என்று இலங்கை தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரக்கொட இதனை த ஹிந்துவிடம் தெரிவித்துள்ளார்.

**இந்தியா, உரிய நேரத்தில் இலங்கைக்கு உதவியளித்து இலங்கையின் பொருளாதார உயிர்வாழ்தலை உறுதி செய்துள்ளது.**

அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் இலங்கைக்கான உதவியை உறுதிப்படுத்தியுள்ளதாக மிலிந்த மொரக்கொட தெரிவித்துள்ளார்.

**இன்று இலங்கையின் பொருளாதாரம் நிலைத்திருப்பதற்கு இந்தியா வழங்கிய ஆதரவே காரணம் என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும்.**

யாரும் தலையிடாத போது இந்தியாவின் ஆதரவு கிடைத்தது. சர்வதேச நாணயநிதியத்திடம் சுமார் 2.9 பில்லியன் டொலர் கடனுக்காக இலங்கை சென்றுள்ளது.

அது பல நிபந்தனைகளுடன் பல ஆண்டுகளாக வழங்கப்படும். அதனுடன் ஒப்பிடுகையில், **இந்தியா உண்மையில் எங்களுக்கு 3.9 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.** (நி)

# நீதிபதிகளின் சம்பளத்தில் வரி அறவிட இடைக்கால தடை

(கொழும்பு)

ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட வருமானம் பெறுவோரிடம் வரி அறவிட அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை, நீதிமன்ற நீதிபதிகள் விடயத்தில் நடைமுறைப்படுத்தாமல் தற்போதைய நிலையை பேணுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

**மறு அறிவித்தல் வரை இந்த இடைக்கால தடை உத்தரவை நடைமுறைப்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.**

உள்நாட்டு இறைவரி சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு அமைய, முற்பணம் சார்ந்த வருமான வரியை ஆட்சேபித்து இலங்கை நீதிச் சேவைகள் சங்கம் தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது, **மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை கருத்திற்கொண்டு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.** (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணி விராட் கோலியை நம்பியுள்ளது

## கங்குலி தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணி விராட் கோலியை நம்பியுள்ளது. அதனால் அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாக செயற்பட வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சவுரவ் கங்குலி தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கூறியதாவது.

விராட் கோலி சிறப்பாக செயற்படுகிறார். வங்கதேசம் மற்றும் இலங்கைக்கு எதிராக அவர் சிறப்பாக செயற்பட்டார். இந்திய கிரிக்கெட் அணி அவரை நம்பியிருப்பதால் அவர் டெஸ்ட் கிரிக் கெட்டிலும் சிறப்பாக செயற்பட வேண்டும். அவுஸ்திரேலிய தொடர் விரைவில் வரவுள்ளது. அது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன். உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியாவும் அவுஸ்திரேலி யாவும் விளையாட வேண்டும் என்று நான் விரும்பு கிறேன் எனத் தெரிவித்தார். (4)

# நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் ருதுராஜ் கெய்க்வாட் விலகல்



இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் இந்தியா வென்றது. இதையடுத்து இரு அணிகளுக்கு இடையே 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரின் முதல் போட்டி ராஞ்சியில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்த தொடருக்காக இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ள இளம் ஓபனிங் பட்ஸ்மேன் ருதுராஜ் கெய்க்வாட் காயம் காரணமாக விலகி உள்ளார்.

இந்தத் தொடருக்கு முன்னதாக மகராஷ்டிரா - ஐதராபாத் அணிகள் மோதிய ராஞ்சி கோப்பை கிரிக்கெட்டில் பங்கேற்ற அவர் 8, 0 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார்.

இந்தப் போட்டிக்கு பின்னர் அவருக்கு மணிக்கட்டில் காயம் ஏற்பட்டிருப்பதாக கூறப்பட்ட நிலையில், தற்போது நியூசிலாந்துக்கு எதிரான இருபது-20 தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார்.

காயம் காரணமாக ஏற்கனவே கடந்த ஆண்டில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான இருபது-20 தொடரில் விளையாட முடியாமல் வாய்ப்பை இழந்தார். இதைத்தொடர்ந்து தற்போது 'அணியில் இடம் கிடைத்திருக்கும் இந்தச் சூழலில் மீண்டும் அவர்வாய்ப்பை இழந்தார். (4)

# அவுஸ்திரேலிய ஓபன்; இறுதிக்குள் சிட்சிபாஸ்



அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் தொடரில் கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மெல்பேர்ன், "கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நடந்து வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த அரையிறுதி ஆட்டம் ஒன்றில் ரஷ்ய வீரர் கரன் கச்சனோவ், கிரீஸ் வீரர் சிட்சிபா சுடன் மோதினார். இந்த போட்டியில் சிட்சிபாஸ் 7-6 (7-2), 6-4, 6-7 (6-8), 6-3 என்ற செட் கணக்கில் கச்சனோவை வீழ்த்தி வெற்றி பெற்றார். இந்த வெற் றியின் மூலம் சிட்சிபாஸ் இறுதி போட்டிக்கு முன்னேறினார். தொடர்ந்து நடைபெறும் மற்றொரு அரையிறுதி போட்டியில் நோவக் ஜோகோவிச் (செர் பியா)-டாமி பால் (அமெரிக்கா) மோதுகின்றனர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2755

**நிமால்**




**திவாஜினி**

மதிப்புள்ள ரூபாய் நோட்டுக்கள் அமைதியாக இருக்கிறது. மதிப்பில்லா சில்லறைக் காசு தான் அதிக சத்தம் போடுகிறது. மனிதர்களும் இப்படித்தான்.

**பவதாரணி**

பெண்களை நம்பித்தான் நகைக் கடைகள் திறக்கப்படுகின்றன.



ஆண்களை நம்பித்தான் அடகுக் கடைகள் திறக்கப்படுகின்றன.

**நிசாந்த்**

என் மகன் ரொம்ப புத்திசாலி ஒரு தீப்பெட்டி வாங்கினா அதில ஐம்பது குச்சி இருக்கான்னு எண்ணிப் பார்த்துத்தான் வாங்கிட்டு வருவான்.

என் மகன் உங்க மகனை விட புத்திசாலி எல்லா குச்சியும் எரியுதான்னு கொளுத்திப் பார்த்திட்டுத்தான் வாங்கிட்டு வருவான்.

**கல்பனா**



மனசும் மணி பர்சும் ஒன்னுதான் சில்லறை விடயங்களை இறக்கி வைக்கும் வரை கனமாகத்தான் இருக்கும்.

**குயினா**

டாக்டர் இடது கால் ரொம்ப வலிக்குது வயது ஆயிடுச்சு அதான் வலது காலுக்கும் அதே வயதுதானே ஆச்சு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லை கொள்வனவு செய்யாவிட்டால் அரசுக்கு எதிராக போராட்டம் வெடிக்கும்

## மன்னார் விவசாய அமைப்புகள் எச்சரிக்கை

**(மன்னார்)**

**விவசாயிகளின் நெல்லை நியாய விலைக்கு அரசாங்கம் கொள்வனவு செய்யாது விட்டால் அரசாங்கத்திற்கு எதிராக விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என மன்னார் மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.**

நேற்று மன்னார் மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது விவசாய அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசினால் இதுவரை நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை. தனியார் வியாபாரிகள் மிகவும் குறைந்த விலையில்,70 கிலோ கொண்ட ஒரு மூடையினை 4500 ரூபாய் முதல் 4700 ரூபாய் வரை கொள்வனவு செய்கிறார்கள்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் விவசாயிகள் மேற்கொண்ட நெற்பயிர்ச் செய்கையின் அறுவடை நெல்லை மிகக் குறைந்த விலைக்கு கொள்வனவு செய்கிறார்கள். ஏற்கனவே அரசாங்கம் கூறியது போல் ஒரு கிலோ நெல்லை 130 ரூபாய் நியாய விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள கிருமிநாசினி, களைநாசினி போன்றவற்றை ஏற்கனவே காணப்பட்ட விலையை விட சுமார் 5 மடங்கு அதிக விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டு விவசாய செய்கை முன்னெடுத்த போதும் நெல்லை குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலை நீடிக்குமாக இருந்தால் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட தயக்கம் காட்டும் நிலை ஏற்படும்.

எனவே எமது விவசாயிகளின் நெல்லை நியாய விலைக்கு அரசாங்கம் கொள்வனவு செய்யாது விட்டால் அரசாங்கத்திற்கு எதிராக விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என தெரிவித்தனர். (4-6-285)

### வடக்கு - கிழக்கில்

# விகாரைகளுக்கு அருகில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டாம்

## மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பௌத்தர்கள் வாழும் வடக்கு, கிழக்கில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க பௌத்த தலங்களை போர் நடைபெற்ற காலத்தில் இருந்து இதுவரையும் பாதுகாத்து பராமரித்து வருவது பாதுகாப்புப் படையினர் எனவும் அவர்களை இந்த வழிபாட்டு தலங்களில் இருந்து அப்புறப்படுத்த வேண்டாம் என மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் மகாநாயக்க தேரர்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இந்த விகாரைகளை உயிர் தியாகம் செய்து பாதுகாத்த பௌத்த பிக்குகள் அந்த பிரதேசங்களுக்கு மிகப் பெரிய பொதுச் சேவை செய்துள்ளனர். வறிய மக்கள் பெரும்பாலும் விகாரைகளால் போஷிக்கப்பட்டனர்.

இதற்கு பின்பலத்தை பாதுகாப்பு தரப்பினரே பெற்றுக் கொடுத்துள்ளனர். வடக்கு, கிழக்கில் உள்ள விகாரைகளுக்கு அருகில் உள்ள இராணுவ முகாம்கள் அவற்றின் பாதுகாப்புக்காக அப்படி இருப்பது நல்லது எனவும் மகாநாயக்க தேரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (நி)

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவிற்கான முன்னாயத்தக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 3,4 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.


திருவிழாவில் 4500 இலங்கை பக்தர்களையும் 3500 இந்திய பக்தர்களையும் மத குருமார்கள் உள்ளடங்கலாக 1000 சிறப்பு அதிதிகளையும் அனுமதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இந்தியத் தூதரக அதிகாரிகள் ராம் மகேஸ், குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், வடமாகாண கடற்படைத் தளபதி தென்னக் கோன், யாழ். மாவட்ட கடற்படைத் தளபதி, இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (4-6-33)


# இராசிபலன்

28.01.2023
தை 14, சனிக்கிழமை
சப்தமி பிற்பகல் 3.16 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 1.00 மணிவரை
சுபநேரம் 3.36-5.06 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை
சந்திராஷ்டமம்
உத்தரம், அத்தம்


வளவன்




கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமாக ஆதாயம் கிடைக்கலாம், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.



காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பெற்றோர் மீதான பாசம் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.




விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.



சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.



குடும்ப பொறுப்புக்கள் கூடும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.



குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.



செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

உங்களை நீங்களே உயர்த்துவது ஆணவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 4111 பேர் தேர்தலில் போட்டி

## உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 402 உறுப்பினர்கள் தெரிவுக்காக 4111 பேர் போட்டியிடுகிறார்கள் என யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இம் முறை போட்டியிடுகின்ற கட்சிகள் சுயேட்சை குழுக்கள் தங்களுடைய வேட்புமனுக்களை தாக்கல் செய்திருக்கிற செயற்பாடு முடிவுறுத்தப்பட்டுள்ள நிலை யில் இந்த முறை தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் 13 அரசியல் கட்சிகளும் 15 சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

13 அரசியல் கட்சிகள் சார்பில் 135 வேட்புமனுக்களும் 15 சுயே ட்சை குழுக்கள் சார்பில் 15 வேட்புமனுக்களுமாக 150 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு தேர்தலுக்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த முறை தேர்தலில் வாக்களிப்பதற்கென யாழ். மாவட்டத்தில் 4 இலட்சத்து 86 ஆயிரத்து 423 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்கள்.

அவர்கள் வாக்களிப்பதற்காக 514 வாக்களிப்பு நிலையங்கள் யாழ்.மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை உள்ளூராட்சி மன்ற சட்டத்திற்கிணங்க அந்த ந்த வட்டாரங்களிலே வாக்குகள் எண்ணப்பட்டு வட்டாரங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளோம்.

அந்த வகையிலே 243 வாக்கு எண்ணும் நிலையங்கள் யாழ்.மாவட்டம் முழுவதுமாக அமைக்கப்படவுள்ளன.

எனவே அந்த 243 வாக்க ளிப்பு நிலையங்களில் வாக்கு கள் எண்ணப்பட்டு வட்டார தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் பட்டு பின்னர் மாவட்ட ரீதியாக முடிவுகள் அறிவிக்கப்படுகிற ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (4-6-33-104)

# அரிய வகை கடலாமைகளுடன் இருவர் மன்னாரில் கைது



(மன்னார்)

மன்னார்-கீரி பகுதியில் இறைச்சிக்காக கொண்டு சென்ற கடலாமையுடன் நேற்று மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் 2 நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கீரி பகுதியைச் சேர்ந்த 50 மற்றும் 55 வயதுடையவர்கள் என மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் மீட்கப்பட்ட கடலாமை மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-285)

# கல்லுண்டாய் வாள்வெட்டு பிரதான சந்தேக நபர் கைது

(அராலி)

கடந்த முதலாம் திகதி மானிப்பாய் கல்லுண்டாய்ப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து வீட்டில் இருந்தவர்களை வாளால் வெட்டி காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் நேற்று யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயற்படும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-33-104)

# ஞானச்சுடர் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் 301 ஆவது மாத வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 3 பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர், பிரம்மஸ்ரீ ப.மனோகர குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள், கலாநிதி ஆறு.திருமுருகன், ஆ.சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

# மூன்று தேர்தல் வன்முறைகள் யாழில் நேற்று வரை பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று வரை மூன்று தேர்தல் வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் தெரிவித்தார்.

தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு தேர்தல் வேலைகள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்றைய தினம் வரை 3 தேர்தல் வன்முறை சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக நடவடிக்கைக்கு அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (4-6-104)

# வடக்கு விவசாய உற்பத்திகளை சிங்கப்பூரில் சந்தைப்படுத்த ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய உற்பத்தி பொருட்களை சிங்கப்பூரில் சந்தைப்படுத்துவது தொடர்பில் சிங்கப்பூர் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் விரைவில் ஆலோசனை நடத்தப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி நாட்டின் உற்பத்தி துறையை மேம்படுத்துவதற்கான முதலீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறார்.

ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய முதலீடுகள் தொடர்பில் இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் உயர்மட்ட குழுவினருடன் ஏற்கனவே சந்திப்புகள் இடம் பெற்றிருக்கின்றன.

அதன் தொடர்ச்சியாக வடக்கில் சுகாதாரம், விவசாயம் ஆகிய துறைகளை ஊக்குவிப்பதற்கு சிங்கப்பூர் அரசாங்கத்தின் உதவியை பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கின் விவசாய உற்பத்திகளை சிங்கப்பூர் நாட்டில் சந்தைப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை களை சிங்கப்பூர் சிரேஷ்ட அமைச்சரான தர்மன் சண்முக ரத்தினத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தொடர்ச்சியாக சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தா னிகரின் உதவியை பெற்றுக் கொண்டு முன்னோக்கி நகர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)




செலான் வங்கியின் வருடாந்த தைப்பொங்கல் கொண்டாட்டம் கொழும்பிலுள்ள வங்கியின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

செலான் வங்கியின் தலைவர் ரவி டயஸ் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன, பிரதி பிரதான நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர, செலான் வங்கியின் ஊழியர் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகியோர் தைப்பொங்கல் விழாவில் பங்கேற்றிருந்தனர்.

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2022

### பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்

ச.அட்சயா-173, க.கோபிகா-165, ம.மதுசன்-164, பா.யன்சிகா-164, கே.மிதுரிகா-162, அ.சஜெந்தா-159, ரா.ரக்சிதா-158, ஜெ.தனாதிபன்-157, நே.கபிநயா-156, தி.சகிராம்-153, வி.யனிஸ்ரன்-150, ச.அன்றியா-148, சி.தனுஸ்கா-147.

### கட்டைக்காடு அ.த.க பாடசாலை

ச.பத்மகவி-176, பு.றதுநிஷா-162, ப.டதுர்சன்-157, சி.அபிநயா-156, செ.லிபினா-147.

### கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

எம்.பிரணவிக்கா-153, எம்.யுனிஸ்ரா-146.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மின்சார சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு



(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் நிலையில், எவ் வித தடையுமின்றி தொடர்ச்சியாக மின் சாரத்தை விநியோகிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு விடுத்துள்ள உத்த ரவை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று முன் தினம் எழுத்து மூல அறிவித்தல் விடுத் துள்ளது. (நி)

# மனித உரிமைகளை மதிப்பது இலங்கைக்கு மிக அவசியம்

## அமெரிக்க அதிகாரி

(கொழும்பு)

மனித உரிமைகளிற்கான மதிப்பு இலங்கையின் ஸ்திரதன்மைக்கும் பொருளாதார செழிப்பிற்கும் அவசியமான விடயம் என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சர்வதேச குற்றம் நீதிக்கான தூதுவர் பெத்வான் சாக் தெரிவித்துள்ளார்.

கனடாவின் தமிழ் புலம்பெயர் அமைப்புகளுடனான சந்திப்பின் பின்னர் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.



இலங்கையில் நீதி பொறுப்புக்கூறல் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக கனடாவை சேர்ந்த தமிழ் புலம்பெயர் அமைப்புகளுடன் அர்த்தபூர்வமான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மிருக சீரிடம் 3<br>கி.பா: 27 சூரி 8 செவ் 12 இல்<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்: BSc (QS)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/10520 | பிறப்பு: 1998 கிறிஸ்தவம் NRC<br>தகைமை/தொழில்: BSc<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ: G/11892 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 19 ¼ சூரி, செவ் 3 இல்<br>உயரம் : 178 cm<br>தகைமை/தொழில்: Management Service Officer<br>எதிர்பார்ப்பு: வேலை பார்க்கும் படித்த பெண்<br>தொ.இ: B/10523 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: சூரி, செவ் 5 இல்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்:BSc<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/11895 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 46 சூரி 6 செவ் 1 இல்<br>உயரம்: 5' 11"<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: B/10542 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 42 சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: விவாசாய பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி நிரந்தர தொழில்<br>தொ.இ: G/11907 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 1<br>கி.பா: 73 சூரி 7 செவ் 8 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: A/L வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: படித்த் பெண்<br>தொ.இ:B/10543 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: சூரி 7 செவ் 6 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BBA நிகழ்ச்சி திட்டமிடல் அதிகாரி<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/475 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



உ





# ஞானச்சுடர் 301 ஆவது மாத வெளியீடு

இடம் :- சந்நிதியான் ஆச்சிரமம் தொண்டைமானாறு

காலம் :- 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி

சந்நிதி வேற்பெருமானிற்கு அபிஷேக பூஜைகளுடன் நிகழ்வு ஆரம்பமாகும்.

ஆசியுரைகள் :- சிவஸ்ரீ.சோ.தண்டபாணிக தேசிகர் அவர்கள்
பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் அவர்கள்

அருளுரை :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள்
(2 ஆவது குருமகா சந்நிதானம்)

வெளியீட்டுரை :- கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு.ஆ.சிவநாதன் அவர்கள்

சிறப்பு பிரதிகள் :- தை மாத ஞானச்சுடர் வெளியீட்டுக்கு காத்திரமான பங்களிப்புச் செய்யும் மக்கள் வங்கி சமூகத்தினர்.

துவிச்சக்கரவண்டி வழங்கல் :- பாடசாலையில் கல்வி கற்கும் 3 மாணவர்கள்

இதுவரை காலமும் வெளிவந்த ஞானச்சுடர் மாத வெளியீட்டில், வெளியீட்டுரை மதிப்பீட்டுரை செய்த அனைவரினது வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சைவகலை பண்பாட்டு பேரவை, சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

(C-5839)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 88





ஏறக்குறைய இரண்டு காரியங்களும் ஒரே சமயத்தில் முடிய வேண்டும். ஒரு பகைவனை முடித்த பிறகு அவகாசம் கொடுத்தால், இன்னொரு பகைவன் ஜாக்கிரதையாகி விடுவான்! அதற்கு இடமே கொடுக்கக் கூடாது. தெரிகிறதா? உங்களில் இலங்கைக்குப் போக யார் யார் ஆயத்தமாயிருக்கிறீர்கள்? என்றான் ரவிதாஸன்.

"நான் போகிறேன்!", "நான்தான் போவேன்!" என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் கேட்டன.

"யார் போகிறது என்பதை அடுத்த முறை பாண்டிய நாட்டில் கூடித் தீர்மானிக்கலாம்! அதுவரைக்கும் இங்கே செய்ய வேண்டிய ஏற்பாடுகள் இன்னும் சில இருக்கின்றன!" என்றான் ரவிதாஸன்.

"ஈழத்துக்கு எந்த வழி போவது நல்லது?" என்று ஒருவன் கேட்டான்.

"கோடிக்கரை வழியாகப் போகலாம். கடலைக் கடப்பதற்கு அது நல்ல வழி. ஆனால் இங்கிருந்து கோடிக்கரை வரையில் செல்வது கடினம் நெடுகிலும் பகைவர்கள் ஆங்காங்கே ஒற்றர்கள். ஆகையால் சேதுவுக்குச் சென்று அங்கே கடலைத் தாண்டி மாதோட்டத்துக் கருகில் இறங்குவது தான் நல்லது. இலங்கை போகிறவர்கள் சமயத்தில் படகு வலிக்கவும் கட்டு மரம் தள்ளவும் கடலில் நீந்தவும் தெரிந்தவர்களாயிருக்க வேண்டும். இங்கே யாருக்கு நீந்தத் தெரியும்?"

"எனக்குத் தெரியும்", "எனக்கும் தெரியும்" என்ற குரல்கள் எழுந்தன.

"முதலில், இலங்கை மன்னன் மகிந்தனைக் கண்டு பேசிவிட்டுப் பிறகு காரியத்தில் இறங்க வேண்டும். ஆகையால் ஈழத்துக்குப் போகிறவர்களில் ஒருவருக்காவது சிங்கள மொழி தெரிந்திருக்க வேண்டும். ஆ! நமது சோமன் சாம்பவன் இன்னும் வந்து சேரவில்லையே? யாராவது அவனை இன்றைக்குப் பார்த்தீர்களா?"

"இதோ வந்து கொண்டிருக்கிறேன்!" என்று ஆழ்வார்க்கடியானுக்கு மிக்க சமீபத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

அடியான் மேலும் மரத்தோடு மரமாக ஒட்டிக் கொண்டான். அடடா! இந்தப் பாழும் உடம்பு இப்படிப் பெருத்துவிட்டது எவ்வளவு சங்கடமாயிருக்கிறது! புதிதாக இரண்டு பேர் அக்கூட்டத்தில் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

ஆழ்வார்க்கடியான் தன் முகத்தில் ஒரு சிறு பகுதியை மட்டுமே மரத்துக்கு வெளியே நீட்டி எட்டிப் பார்த்தான். புதிதாக வந்தவர்கள் இருவரும் கொள்ளிடக் கரையில் அரச மரத்தடியில் சந்தித்துப் பேசியவர்கள் தான் என்று தெரிந்து கொண்டான்.

புது மனிதர்களைக் கண்டதும் ரவிதாஸன், "வாருங்கள்! வாருங்கள்! ஒருவேளை ஏதாவது உங்களுக்கு ஆபத்து வந்து விட்டதோ, வராமலே இருந்து விடுவீர்களோ என்று பயந்தேன் எங்கிருந்து எந்த வழியாக வந்தீர்கள்?" என்றான்.

"கொள்ளிடக் கரையோடு வந்தோம், வழியில் ஒரு கூட்டம் நரிகள் வளைத்துக் கொண்டன. நரிகளிடம் சிக்காமல் தப்பித்து வருவதற்கு நேரம் ஆகிவிட்டது!" என்றான் சோமன் சாம்பவன்.

"புலிக்கும் சிங்கத்துக்கும் பயப்பட்டால் பொருள் உண்டு. நரிக்குப் பயப்படுகிறவர்களால் என்ன காரியத்தைச் சாதித்துவிட முடியும்?" என்றான் அந்தக் கூட்டத்துக்கு முன்னமே வந்திருந்தவர்களில் ஒருவன்.

"அப்படிச் சொல்லாதே, அப்பனே! சிங்கம், புலியைக் காட்டிலும் நரி பொல்லாதது! ஏனெனில், சிங்கமும் புலியும் தனித்தனியே பாய்ந்து வரும் விரோதிகள் அவற்றோடு சண்டையிட்டுச் சமாளிக்கலாம். ஆனால் நரிகளோ கூட்டங் கூட்டமாக வருகின்றன. ஆகையால், அவற்றுக்குப் பலம் அதிகம். சோழ நாட்டு நரிகள் பெருங்கூட்டமாக வந்ததினால் தானே நம் ஒப்பற்ற மன்னாதி மன்னன் தோற்கவும் உயிர் துறக்கவும் நேர்ந்தது? இல்லாவிட்டால் அவ்விதம் நேர்ந்திருக்குமா?"

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### நொண்டிக் குதிரை

"ஐயா... அதற்கு விலை கொடுக்கும் நிலையில் எங்களிடம் பணம் இல்லையே" என்றார் குரு. "எனக்குப் பணம் ஏதும் வேண்டாம். உங்களுக்கு உதவ முடிகிறதே என்ற மகிழ்ச்சி ஒன்றே எனக்குப் போதும்" என்றான் அவன் மகிழ்ச்சியோடு.

இலவசமாக ஒரு குதிரை கிடைத்தால் அந்தக் குதிரையை அவர்கள் வேண்டாமென்று மறுத்து விடுவார்கள்? மகிழ்ச்சியோடு அவர்கள் அவனுடன் சென்றார்கள்.

பரமார்த்த குரு பரியேற்றம்

குருவோடும் சிஷ்யர்களோடும் சென்ற நொண்டிக் குதிரைக்காரன் அவர்களை அருகே இருந்த தன் ஊருக்கு அன்போடு அழைத்துச் சென்றான். அவன் தனவந்தனாக இல்லாதவன் என்றாலும் சொல்லைக் காப்பாற்றக் கூடிய நல்ல குணம் கொண்டவனாக இருந்தான்.

அன்றிரவு அவர்களைத் தன் வீட்டில் தங்கச் செய்து, உணவு, இடம் முதலியவை கொடுத்து மரியாதை[illegible] தகுந்தபடி உபசரி மகிழ்ந்தான். பலவித உணவு வகைகளைப் படைத்ததோடு, பாக்கு வெற்றிலை தாம்பூலம் கொடுத்து மகிழ்வித்தான்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் அவர் தன் வயல் வெளிக்குச் சென்றான். அங்கே மேய்ந்து கொண்டிருந்ததன் குதிரையைப் பிடித்துக் கொண்டு வந்தான் அதைப் பரமார்த்த குருவுக்குப் பக்தியோடு காணிக்கையாகக் கொடுத்தான்.

அவனுக்குச் சொந்தமாக இருந்த அந்த ஒரே குதிரை, வயதானதாக ஒரு கண் பொட்டையாக, ஒரு காது மூளியாக, முன்னங்கால் ஒன்று நொண்டியாக,? பின்னங்கால் ஒன்று முட்டிக்காலாக, பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆனாலும், பரிதாபமான கிழகுரு பரமார்த்தகுருக்கு ஏற்றதாகத் தான் இருந்தது. அந்தக் குதிரை எப்படி இருந்தாலும் அது பணம் ஏதும் செலவில்லாம். இலவசமாகக் கிடைப்பதுதானே என்ற மகிழ்ச்சி அவர்களுக்குள் நிறைந்திருந்தது.

சிஷ்யர்கள் அந்தக் குதிரையைச் சுற்றிலும் நின்று கொண்டு சிறிது நேரம் வரை நோட்டம் விட்டார்கள். மட்டி அதைச் சுற்றி வந்து அதன் மேனியைத் தடவி மகிழ்ந்தான். அதன் நொண்டிக் காலைப் பாசத்தோடு தொட்டு மகிழ்ந்தான் மடையன். அதன் மொட்டை வாலை அன்போடு பற்றி உருவி மகிழ்ந்தான் மூடன். அதன் நொள்ளைக் கண்ணிலிருந்து வழிந்து கிடந்த ஊளையைப் பற்றொடு துடைத்துப் பரவசப்பட்டான் பேதை. பச்சைப் பசேல் என்ற இருந்த புல்லை நிறையப் பிடுங்கிக் கொண்டு வந்து பாசத்தோடு அதற்கு உண்ணக் கொடுத்து இன்புற்றான் மிலேச்சன். அதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பரமார்த்த குருவுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

அதற்குப் பிறகு அவர்கள், குதிரையின் மேல் ஏறி அமர்ந்து சவாரி செய்வதற்காக சாதனங்களுக்கு வழி தேடினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
சிறுதுரும்பும் பல் குத்த உதவும்.
- பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிவபெருமான் இல்லாத யாகமும் சண்டேஸ்வரர் இல்லாத உற்சவமும்

சைவ சமயம் மிக உயர்ந்த தத்துவங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

இதை நாம் கூறும்போது ஏனைய சமயங்களில் உயர் தத்துவங்கள் இல்லை என்று யாரும் பொருள் கொள்ளக்கூடாது

பொதுவில் அனைத்துச் சமயங்களும் நல்லவற்றையே எடுத்து இயம்புகின்றன.

எனினும் சமயவாத சிந்தனையுடைய வர்கள் தத்தம் சமயமே உயர்வானதென்ற மமதையில் ஏனைய சமயங்களில் இருக்கக்கூடிய உயர்தத்துவங்களை அறியத் தவறி விடுகின்றனர் என்ற கருத்தோடு அந்த விடயத்தை நிறைவுபடுத்திக் கொள்ளலாம்.

இங்கு நாம் கூறமுற்படுவது சைவ சமயத்தில் இருக்கக்கூடிய முகாமைத்துவ, இராஜ வியூக நுட்பங்களைப் பற்றியதாகும்.

ஆம், நாம் எந்தக் காரியத்தைச் செய்யத் தலைப்பட்டாலும் அது விடயத்தில் உச்சமாக இருக்கக்கூடியவர்கள் உள்பட அனைவரையும் மதித்து நடக்க வேண்டும் என்பதாகும்.

அதாவது ஒரு குறித்த அமைப்பின் தலைவராக இருக்கக்கூடிய ஒருவரை புறநீங்கலாக்கிவிட்டு இதர அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களை அழைத்து அவர்களுக்கு விருந்து கொடுத்து அவர்களால் ஆக வேண்டிய காரியத்தை நிறைவேற்றலாம் என்று நினைத்தால் அது மிகப்பெரும் தவறு.

ஏனெனில் சம்பந்தப்பட்ட தலைவர் தனக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டு சம்பந்தப்பட்ட காரியத்துக்குத் தடை விதிக்க முடியும்.

உதாரணத்துக்கு மன்மோகன் சிங் இந்தியப் பிரதமராக இருந்தபோது, அவரைச் சந்திப்பதற்காகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழகத்தில் வை.கோபாலசாமி வீட்டில் தங்கிவிட்டு டெல்லிக்குச் சென்றனர்.

அப்போது வைகோவுடன் கடும் பகை கொண்டிருந்த கலைஞர் மு.கருணாநிதி தமிழகத்தின் முதல்வராக இருந்தார்.

தவிர, திமுகவின் ஆதரவுடனேயே காங்கிரஸ் மத்தியில் ஆட்சி செய்தது.

இந்த நிலையில் கூட்டமைப்பைச் சந்திக்க வேண்டாமென கலைஞர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு இரகசியமாக அறிவித்துவிட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெறுங்கையோடு நாடு திரும்பியது.

இங்குதான் சிவனை அழைக்காமல் தக்கன் செய்த யாகத்துக்கு நேர்ந்த கதி அறிதற்குரியது.

இதுபோல சிறியவர் - பதவிநிலையில் குறைந்தவர் என்ற எண்ணத்தோடு எவரையும் ஒதுக்கிவிடலாகாது.

மாறாக அவர்களுக்கும் உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும் என்பதை எடுத்தியம்புவதே சண்டேஸ்வரர் உற்சவமாகும்.

ஆம், சைவாலயங்களில் இடம்பெறும் பூசை வழிபாடுகளின் இறுதியில் சண்டேஸ்வரர் உற்சவம் நடைபெறுவதானது மேற்போந்த முகாமைத்துவத் தத்துவத்தை எடுத்தியம்புவதாகும்.

நாயன்மார்களில் ஒருவரான சண்டேஸ்வரர் இறைவனிடம் இருந்து வரங்களை நமக்குப் பெற்றுத் தருபவர்.

எனவே வரங்களைப் பெற்றுத் தரக்கூடிய ஒருவரை நாம் கவனிக்காமல் விடுவோமாயின், குறித்த வரம் நம்மை வந்தடையாமலும் போகலாம்.

ஆகவே காரியம் முழுமையாக நிறைவேற வேண்டுமாயின், தக்கனின் யாகத்துக்கு சிவனை அழைப்பதும் சண்டேஸ்வரர் உற்சவத்தை கிரமமாகச் செய்வதும் கட்டாயமானதாகும்.

இந்த உண்மையை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சர்வகட்சிக் கூட்டத்தை கூட்டும் ஏற்பாட்டாளர்கள் புரிந்து கொள்வது அவசியம்.

ஆம், எமக்குப் பிடித்தவர்களுடன் கூடி முடிவெடுப்போம். மற்றவர்கள் தேவையில்லை என்று யார் நினைத்தாலும் அது சிவன் இல்லாத தக்கனின் யாகமாகவும் சண்டேஸ்வரர் உற்சவம் இல்லாத திருவிழாவாகவுமே நிலைமை முடியும்.

# சுதந்திரதினத்தை குறைந்த செலவில் பெருமையுடன் கொண்டாட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் அறிவுறுத்தல்

(கொழும்பு)

குறைந்த செலவில் பிரமாண்டமாகவும் பெருமையாகவும் சுதந்திரதினத்தைக் கொண்டாடுவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதற்கமைய, 75 ஆவது சுதந்திரதின விழாவை முன்னிட்டு, பெப்ரவரி 2 ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அதற்கமைய சிறப்பு தலதா பூஜை மற்றும் மஹாபிரித் சொற்பொழிவு, சர்வமத நிகழ்வுகள், சுதந்திர சதுக்கத்தில் கலாசார நிகழ்ச்சி, காலி முகத்திடலில் நடைபெறும் பாரம்பரிய சுதந்திரதின பிரதான நிகழ்வு, தேசிய பூங்காக்கள் மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலை போன்றவற்றுக்கு இலவச அனுமதி, யாழ்.கலாசார மையம் திறப்பு, கண்டி பெரஹர, தேவேந்திரமுனையில் இருந்து பருத்தித்துறை வரையிலான சிறப்பு சைக்கிள் சவாரி போன்ற பல நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்குத் தேவையான செலவுகளை மதிப்பிடும் போதும் நடைமுறையில் அதற்கான செலவுகளை மேற்கொள்ளும்போதும் நாட்டின் தற்போதைய நிதி நிலைமை குறித்து கவனம் செலுத்துவது, அரசியல் தலைமை மற்றும் அதிகாரிகளின் பொறுப்பாகும் என்றும் அதற்கேற்ப செலவினங்களைக் குறைத்து செயற்படுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (ம-7)

# 15 வயது சிறுமி பணத்திற்காக விற்பனை

## தாய் உட்பட நால்வர் கைது

(கொழும்பு)

பாணந்துறையில் பணத்திற்காக 15 வயது சிறுமியை வர்த்தகர்கள் உள்ளிட்ட பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்தமை தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாய் மற்றும் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 42, 45, 54 மற்றும் 84 வயதுடைய பாணந்துறை, கெஸ்பேவ மற்றும் ஹோரக்கன பிரதேசங்களைச் சேர்ந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுமி ஒருவரை பணத்திற்காக வயதானவர்களுக்கு விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் குழுவினர் சிறுமியை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலும் பொலிஸ் விசாரணையில், அப்பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர், சிறுமியின் தாயை ஏமாற்றி பணம் கொடுத்து சிறுமியை விற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகத்திற்கிடமான தொழிலதிபரான பெண், பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும், அவரைக் கண்டுபிடிக்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# 75 ஆவது சுதந்திரதின துவிச்சக்கர சவாரி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி நடைபெறவுள்ள 75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை ஒட்டி ஜனாதிபதி செயலகம், பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு இணைந்து ஏற்பாடு செய்துள்ள தேசிய சுதந்திரதின துவிச்சக்கர சவாரிபோட்டியானது பருத்தித்துறை முனையிலிருந்து தெய்வேந்திரமுனை வரை 31.01.2023 தொடக்கம் 03.02.2023 வரை நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் துவிச்சக்கர சவாரியில் அமைச்சுக்களின் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 150ற்கு மேற்பட்டோர் பங்குபற்றவுள்ளனர். (ம-7)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் ஆர்.கே.விஜய நிர்மலா வழங்குவார். மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# அடகு வைத்த நகைகளை இழந்த வாடிக்கையாளர்களுக்கு விரைவில் தீர்வு

## மக்கள் வங்கி பிரதிப் பொது முகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் திருநெல்வேலி கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அங்கு பணியாற்றிய அதிகாரி ஒருவர் கையாடிச் சென்றதன் காரணமாகத் தமது நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மிக விரைவில் உரிய தீர்வு பெற்றுத்தரப்படும் என மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம்.டபிள்யூ.சூரிய குமார தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளர்களுக்கும் வங்கி அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கன்னாதிட்டியில் அமைந்துள்ள பிராந்தியத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

வங்கியின் அதிகாரிகள் விட்ட தவறுக்காக உங்களைப் பாதிப்படைய விட்டிருக்கக் கூடாது. சில சட்ட நடைமுறைகளின் காரணமாக உங்களுக்கு உடனடியாகத் தீர்வைத் தர முடியாத நிலையில் இருக்கிறோம். ஆனாலும் உங்களுக்கு விரைவாகத் தீர்வைப் பெற்றுத் தருவதற்காக வங்கி சில நகர்வுகளை மேற்கொண்டுள்ளது.

இதுவரை காலமும் நீதவான் நீதிமன்றத்தில் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த வழக்கு இப்போது உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அந்த விசாரணை முடிந்ததும் இயலுமான அளவு விரைவாக வாடிக்கையாளர்களின் நகைகள் விடுவிக்கப்படும். அவ்வாறில்லாமல் தாமதமேற்படுமாயின் வங்கியின் தலைமைக் காரியாலய அதிகாரிகளுடன் பேசி நகைகளுக்கான இன்றைய சந்தைப் பெறுமதியைப் பெற்றுத்தர முயற்சிப்போம் என்று தெரிவித்தார். (4-6,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக நெற்செய்கைகளில் விலாங்கு புழுத் தாக்கம்!



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கையில் விலாங்குப் புழுவின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளதாக கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் என்.ராஜேஸ்கண்ணா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையில் பல்வேறுபட்ட நோயின் தாக்கங்கள் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் புதிதாக நெற்பயிர்களில் விலாங்குப் புழுவின் தாக்கம் சில அவதானிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிர்களில் இலைகள் மஞ்சள் நிறமாகி வளர்ச்சி குன்றி காணப்படுகின்றமை தொடர்பில் விவசாயிகளால் கண்டறியப்பட்டுள்ளதையடுத்து விவசாய போதனாசிரியர்களுக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த வயல் நிலங்களை நேற்று முன்தினம் கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் என். ராஜேஸ்கண்ணா, விவசாய போதனாசிரியர்கள் மற்றும் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் ஆகியோர் களவிஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது குறித்த நோயின் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. (4-6-315)

## புலமைப்பரிசில் பரீட்சையில்

# இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி வவுனியாவில் முதலிடம்



(குருமன்காடு)

புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகிய நிலையில் வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி ச.நிர்சிகா 190 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலாவது இடத்தினைப் பெற்றுள்ளார்.

குறித்த மாணவி பல துறைகளில் சாதனைகளை நிலைநாட்டி வந்த நிலையில், புலமைப்பரிசில் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றை பெற்று பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமையினைத் தேடித் தந்துள்ளதாக பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (4-6-250)

# முகமாலை றோ.க.த.க பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக சித்தி

(தருமபுரம்)



கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி வடக்கு வலயத்திற்குட்பட்ட கிளி/முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் வரலாற்றில் முதல் தடவையாக புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர் ஒருவர் சித்தியடைந்துள்ளார்.

நடைபெற்று முடிந்த 2022 தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளி 143 ஆக இருக்க குறித்த மாணவனான கௌ.கபிஷயன் 147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். (4-6-316)

# பறவைகள் கண்காணிப்பகம் மன்னாரில் திறந்து வைப்பு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள கோரைகுளம் பகுதிக்கு ஆண்டுதோறும் பல ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பறவைகள் வருகை தருவதன் அடிப்படையில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறித்த பறவைகளை பார்வையிடுவதற்காக அமைக்கப்பட்ட பறவைகள் கண்காணிப்பகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் கொழும்புப் பல்கலைக் கழகம் மற்றும் பெண்கள் மேம்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் "வேல்ட் ஓரியன் கிளப்" மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையில் பறவைகள் மற்றும் ஈரநிலம் தொடர்பாக பணியாற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்பில் குறித்த கண்காணிப்பகம் அமைக்கப்பட்டு வைபவ ரீதியாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டது. (4-6-285)

# கருத்தமர்வு

(அராலி)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் சிறுவர் இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கான இலவச ஒரு நாள் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தமர்வானது நாளை காலை 9 மணி தொடக்கம் பி.ப 2 மணி வரை யாழ்ப்பாண நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது.

ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தங்களது பெயர், தொலைபேசி இலக்க விபரங்களை கடமை நேரத்தில் 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும் என வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி.ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தெரிவித்துள்ளார். (4-6-104)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 250 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 400 | 360 | 350 | 350 |
| தக்காளி | 250 | 220 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 200 | 200 | 200 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 200 | 200 | 200 | 250 |
| பூசணி | 80 | 100 | 100 | 100 |
| புடோல் | 250 | 180 | 180 | 120 |
| வாழைக்காய் | 200 | 240 | 140 | 180 |
| சின்ன வெங்காயம் | 600 | 500 | 600 | 550 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 150 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 280 | 400 |
| வெண்டிக்காய் | 250 | 300 | 200 | 320 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 600 | 400 | 400 |
| லீக்ஸ் | 420 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 250 | 250 | 300 | 240 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 1200 | 1400 | 1200 | 1500 |
| போஞ்சி | 250 | 400 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 280 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 120 |
| தேசிக்காய் | 30 | 60 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 300 | 350 | 320 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 300 | 250 |
| முள்ளங்கி | 40 | 80 | 180 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 140 | 160 | — | 140 |

# வரிச் சுமைக்கு எதிராக வங்கி ஊழியர்கள் போராட்டம்



(குருமன்காடு)

நியாயமற்ற வரிச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினால் நேற்று முன்தினம் வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள கார்கில்ஷ் புட்சிட்டிக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வங்கி ஊழியர்கள், நண்பர்களுக்கு வரிச்சலுகை தொழில் வல்லுநர்களுக்கு வரிச்சுமை, வாழுயரும் பணவீக்கம் தொழில் வல்லுநர்கள் நடு வீதிக்கு போன்ற வாசகங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் தொழில் வல்லுநர்களை சுரண்டித் திண்ணும் வரி யோசனையை மீளப் பெறு, அரசியல்வாதி களவெடுத்த காசை எடுத்து நாட்டை திருத்து, வங்கி திருடன்கள் பெரும் பதவிகளில், நியாயமான வரி வேண்டும் மக்களுக்கு சலுகை வேண்டும், எல்லா புறமும் ஊழல் மோசடி இன்னும் அவர்கள் மாடங்களில் போன்ற பல கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (4-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றுக்குள்...

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

செல்லப்பிராணியாக வளர்க்கப்பட்ட வீட்டு நாய் கிணற்றுக்குள் விழுந்துள்ளது.

நாயை மீட்க குடும்பத்தினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர். இதன்போது, மெல்லிய தும்புக் கயிற்றை கட்டி குறித்த இளைஞன் இறங்கியுள்ளார்.

கயிறு அறுந்து, இளைஞன் கிணற்றுக்குள் விழுந்துள்ளார். இதன்போது அவர் சேற்றில் சிக்கியதாக கூறப்படுகிறது.

எனினும், மேலிருந்து அனுப்பப்பட்ட மற்றொரு கயிற்றில் நாயை இணைத்து மேலே எடுக்க உதவியுள்ளார்.

பின்னர் அவர் நீரில் தத்தளித்து, சேற்றில் புதையுண்டு உயிரிழந்துள்ளார். (ம-7,100)

## பாராளுமன்ற...

வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி 08ஆம் திகதி காலை 10.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இக்கூட்டத்தொடர் முடிவடைந்து புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாகும் சந்தர்ப்பத்தில் சம்பிரதாயப்படி ஜனாதிபதியினால் அக்கிராசன உரைநிகழ்த்தப்படும். (ம-7)

## யாழ்.பல்கலைக்...

கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகம் வி.கனகசபாபதி, லங்கா சஸ்ரெயினபிள் வெஞ்ஜஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் குலேந்திரன் சிவராம், வடக்கு உணவு நிறுவனத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான கபிலன் கருணானந்தன் மற்றும் யாழ்.ஆயர் இல்லத்தைச் சேர்ந்த வண.கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் ஆகியோரே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் அறிவித்துள்ளார். (ம-7,38)

## ஜனாதிபதிக்கு...

டிருந்த மேலும் இருவருக்கு நீதிமன்ற அழைப்பாணை வழங்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க வவுனியா மாவட்ட செயலாளருக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவருக்கும் ஜனவரி 31ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான கூட்டத்தில் உறுப்பினராக இருந்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் பொலிஸார் மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொண்டு பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு காயம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டை பொலிஸார் முன்வைத்துள்ளனர். (ம-7,33)

## ஒரு மாத...

மாத ஆண் குழந்தை ஒன்று மரணமடைந்துள்ளது.

இச்சம்பவம் புத்தூர் வடக்குப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த ம.தஸ்மியன் என்ற ஆண் குழந்தையே மரணமடைந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,104)

## நாய்க்கடிக்கு...

எடுக்கவில்லை. இந்நிலையில் வலிப்பு வந்து குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

மரணவிசாரணையை யாழ்போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## பெரியவிளானில்...

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த நபர், நேற்று முன்தினம் வீதியில் சென்றுகொண்டிருந்தவேளை போதையில் வந்த அதே பகுதியைச் சேர்ந்த இருவர் அவருடன் முரண்பட்டனர். குறித்த முரண்பாடு பின்னர் கைகலப்பாக மாறியது.

இதன்போது அவர்கள் இருவரும் சேர்ந்து குறித்த நபரின் தலையில் கம்பியால் தாக்கினர். இந்த தாக்குதலில் படுகாயமடைந்த அவர் அயலில் உள்ளவர்கள் மூலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவர் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இந்த படுகொலை குறித்து இருவர் நேற்றையதினம் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனும் 20 வயதுடைய இளைஞனுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,104)

## ஜனாதிபதி...

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை வெளித்தரப்பினர் தமது சுயதேவைகளுக்காக பயன் படுத்திக் கொள்ள முயற்சிக்கிறார்கள். பொருளாதார நெருக்கடியை காண்பித்து நாட்டுக்கு எதிரான பல விடயங்களை செயற்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளித்தால் நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகள் தோற்றம் பெறும்.

13ஆவதுதிருத்தத்தை முழுமையாகநடைமுறைப் படுத்தவும், அரச வளங்களை தனியார் மயப்படுத்தவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தார்மீக உரிமை கிடையாது. ஏனெனில் அவர் மக்கள் பிரதிநிதி யல்ல, பாராளுமன்றத்தின் 134 உறுப்பினர்களின் பிரதிநிதி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையிலான அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் மக்களாணை கிடையாது, ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நிலை அறிந்து செயற்பட வேண்டும். தனக்கு மக்களாணை உள்ளதா என்பதை அறிய வேண்டுமாயின் அவர் ஏதாவதொரு தேர்தலை தாராளமாக நடத்தலாம் என்றார். (ம-7)

## உள்ளூராட்சி...

இதனைப் பார்க்கின்றோம் என்று பஃவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஏதேனுமொரு வகையில் நிறுத்துவதற்கான சதித்திட்டமாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். இது பொறுப்பற்றவொரு செயற்பாடாகும்.

எனவே இதுபோன்ற பதவி விலகல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த வாரம் செய்திகள் வெளியாகின. எவ்வாறிருப்பினும் இந்த பதவி விலகலானது உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எந்த வகையிலும் தாக்கம் செலுத்தாது என்றார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1468
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 4 2 2 3 8 6
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1043
V 27 60 71 81
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 3255
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
X 25 40 64 66
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1361
K 17 53 59 72 77

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 322
கடகம் 38 39 40 48 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/27
சீட்டிழுப்பு இலக்கம் 5013
T 6 2 6 0 6 7
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1988
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.01.27
தினம் வெள்ளிக்கிழமை
K 13 45 48 59
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,462,240/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.27
சீட்டிழுப்பு இல : 4149
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 4,990,880/-
வெற்றி இலக்கங்கள்
15 26 37 65 K
DLB

சசிரி
சீட்டிழுப்பு 280
சீட்டிழுப்பு திகதி 2023.01.27
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 10 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,849,140/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,202,500/-
திகதி 2023-01-27
வெற்றி வாரம் 3700
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 05 11 39 43
மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,080,960/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 13 15 30 33 62
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1164
வர்ணம் ஊதா
திகதி 2023.01.27 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 301,370,860.20
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1814
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.01.27
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,207,980/-
வெற்றி இலக்கங்கள் 15 32 47 48 O
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களது 3 படகுகள் அரசுடமை

(யாழ்ப்பாணம்)

எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் மூன்று படகுகள் அரசுடமையாக் கப்பட்டதாக ஊர்காவற் றுறை நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் 17 படகுகளுக்கான உரிமை கோரும் வழக்கு ஊர்கா வற்றுறை நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப் பட்டது.

இதன் போது நேற்று ஏழு வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. மூன்று வழக்குகள் அழைக்கப்பட்ட போது படகின் உரிமை யாளர்கள் மன்றில் முன் னிலையாகவில்லை. பல தடவைகள் மன்றில் வழக்கு அழைக்கப்பட்ட போதும் உரிமையாளர் முன்னிலை யாகியிருக்கவில்லை.

இதனால் குறித்த மூன்று படகுகளும் அரசுடமை யாக்கி கட்டளைபிறப்பிக் கப்பட்டது.

மேலும் நான்கு படகு களுக்கான வழக்கு எடுத் துக்கொள்ளப்பட்ட போது உரிமையாளர்கள் மன் றில் முன்னிலையாகியிருந் தனர். வழக்கின் சாட்சி யாளர்களிடம் நேற்று மன்றில் சாட்சியம் பெறப்பட்டது. சாட்சி யினை சட்டத்தரணி அருட்பிரகாசம் நிரோசன் மன்றில் நெறிப்படுத்தினார்.

வழக்குத் தொடு னர் சார்பில் நீரியள் வளத்துறைதிணைக் கள அதிகாரி ம.இரா ஜேந்திரன் குறுக்கு விசாரணைகளை மேற்கொண்டார்.

சாட்சியங்களை அவதானித்த நீத வான் குறித்த வழக் கினை எதிர்வரும் மார்ச் 1ஆம் திக திக்கு தவணையிட் டுள்ளார்.

மேலும் நேற்று மன்றில் முன்னி லையாகியிருந்த நான்கு படகுகளின் உரிமையாளர்களின் வழக்கு எதிர்வரும் 31ம் திகதிக்கு எடுத்துக் கொள ளப்படும் எனவும் அன் றையதினம் படகின் உரி மையாளர்களை மன்றில் முன்னிலையாகு மாறும் நீதவான் ஜே.கஜ நிதி பாலன் உத்தரவிட்டுள் ளார். நேற்று ஊர்காவற் றுறை நீதிமன்றில் பட குரிமை வழக்கிற்காக இராமேஸ்வரம் மீனவர் கள் 10 பேர் கொண்ட குழு முன்னிலையாகியிருந்த னர். (ம-7)


Atom CHEMISTRY CENTRE

zoom வகுப்புகள்

2023 A/L

ORGANIC சனி, ஞாயிறு 10.00 pm - 11.00 pm

PHYSICAL புதன், வெள்ளி 5.00 am - 6.00 am

PAPER CLASS செவ்வாய், வியாழன் 10.00 pm - 11.00 pm

(மாற்றீடு, சிக்கல் அயன், வாயுக்கள், சக்தியியல்)

தொடர்புகளுக்கு S. VASU Bsc 077 903 5663

Atom CHEMISTRY CENTRE

2024 A/L zoom வகுப்புகள்

CALCULATION திங்கள் - செவ்வாய் 9-10 pm

GASES வியாழன் 9.30 -11 pm

BONDING PAPER சனி, ஞாயிறு 9 -10 pm

விரும்பிய பாடங்களில் இணையலாம் 1000/- மட்டும்

தொடர்புகளுக்கு: S. Vasu B.Sc. Tel: 077 903 5663

(14420)


## சுவிட்சர்லாந்தில் கார் விபத்து யாழை சேர்ந்த தந்தை, மகன் பலி



சுவிட்சர்லாந்தின் ஆர் கெவ் கான்டனில் இடம் பெற்ற கார் விபத்துச் சம்ப வத்தில், யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட தந் தையும், மகனும் உயிரிழந் துள்ளனர். அதேவேளை குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தை பூர் வீகமாக கொண்ட தமிழ் குடும்பமொன்றே விபத்தில் சிக்கியது.

St.Gallen கான்டனில் அமைந்துள்ள தமது வீட்டுக்கு செல்லும் வழியில் இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காரில் பயணித்த 18 வய தான மகன் உயிரிழந்தார். தந்தை படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள் ளார்.

அந்த காரில் பயணித்த மற்றும் இரண்டு மகள்களும், தாயாரும் சிறுகாயங்களு டன் வைத்தியசாலையில் அனுமதிப்பட்டனர். (ம-7)

## முச்சக்கரவண்டி சாரதிக்கு தேநீரில் மயக்க மருந்து கலந்து கொடுத்து

### மோதிரம், பணம், தொலைபேசி அபகரிப்பு கொடிகாமத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் இருந்து முச்சக்கரவண்டி சாரதி ஒரு வரை வாடகைக்கு அமர்த் திச் சென்று மோதிரம், தொலைபேசி, பணம் அப கரிக்கப்பட்டமை தொடர்பில் இரண்டு பொலிஸ் நிலை யங்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கபடாமை காரணமாக கொடிகாமம் முச்சக்கார வண்டி சாரதிகள் கொடிகாமம் பொலிஸ் நிலை யத்தினை நேற்று முன் தினம் வியாழக்கிழமை முற்றுகையிட்டதனால் பதட்டமான சூழ்நிலை ஏற் பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த செவ்வாய்க் கிழமை 24 ஆம் திகதி அன்று கொடிகாமம் முச்சக் கரவண்டி நிலையத்தில் தரித்து நின்ற முச்சக்கர வண்டி ஒன்றினை தொலை பேசி மூலம் அழைத்து ஒரு வர் வாடகைக்கு அமர்த்தி யுள்ளார்.

அவர் வாடகைக்கு அமர்த் திச் சென்ற முச்சக்கரவண்டி கோயிலாக்கண்டி பகுதி யில் விபத்துக்குள்ளானது.

தொடர்ந்து அவ்வீதி ஊடா கச் சென்றவர்கள் அவரை மீட்டு பூநகரி வைத்திய சாலையில் அனுமதித்த னர்.

பின்னர் அவர் கிளி நொச்சி ஆதார வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள் ளார். விபத்தின் போது அவர் அணிந்திருந்த மோதிரம், பணம் மற்றும் தொலைபேசி காணாமல் போயிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் கொடிகாமம் மற்றும் சாவ கச்சேரி பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய் யப்பட்டிருந்தது.

ஆனால் இம் முறைப் பாடு தொடர்பில் மூன்று நாட்கள் சென்றும் நடவடிக் கையினை பொலிஸார் மேற்கொள்ளவில்லை என தெரிவித்து கொடிகாமம் முச்சக்கர வண்டி சாரதிகள் நேற்று முன்தினம் வியாழக் கிழமை கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒன்று கூடியதினால் பதற்ற மான சூழ்நிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டனர்.

இதில் கொடிகாமத்தில் இருந்து முச்சக்கர வண் டியை வாடகைக்கு அமர்த் திச் சென்றவர் சாவகச் சேரியிலுள்ள உணவகம் ஒன்றில் முச்சக்கரவண்டி சாரதிக்கு தேநீரில் மயக்க மருந்து கலந்தமை யும் அங்குள்ள கண் காணிப்புக் கமரா வில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

கண்காணிப்புக் கமராவின் ஆதாரங் களை கொண்டு பொலி ஸார் விசாரணை மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7,60)


அகரம் உயர் நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE

மல்லாகம் | கொக்குவில்

தரம் - 06

தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

நிர்வாகி

(14363)

காணி விற்பனைக்கு

மானிப்பாய் உடுவில் பகுதியில் தார் முகப்புடன் ஒரு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இக் காணியை வாங்க விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

விலை - 20,00,000

தெ.பே. :- 076 682 3727, 075 616 8202

(14416)

றோயல் அக்கடமி

ROYAL ACADEMY

நாவலர் றோட், நல்லூர் | அரசடி றோட், யாழ்நகர்

புதிய கல்வியாண்டு - 2023

தரம் 6 தமிழ்மொழி மூலம் English Medium

ஆரம்பம் 01.02.2023 புதன்கிழமை

* கணிதம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T, சிங்களம் ஆகிய பாடங்கள் நடைபெறும்.

யாழ் றோயல் காலை 7 மணி

நல்லூர் றோயல் காலை 9 மணி

தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.

குறிப்பு: பெற்றோர் - ஆசிரியர் கலந்துரையாடலைத் தொடர்ந்து "நாள் வகுப்புக்கள்" ஆரம்பிக்கப்படும்.

— இயக்குநர்

தீபம் கல்வி நிலையம்

THEEBAM EDUCATION CENTRE

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

(கலைக்கோட்டம் அருகில்)

புதிய கல்வியாண்டு - 2023

தரம் 6 • தமிழ் மொழி மூலம் • ENGLISH MEDIUM

ஆரம்பம் 05.02.2023

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவச் செல்வங்களிற்கு வாழ்த்துக்கள்

ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

அன்பான பெற்றோர்களே !

◆ உங்கள் பிள்ளைகளின் எதிர்காலக் கல்விக்காக தீபத்துடன் இணைந்து தரம் 06 முதல் O/L, A/L வரை கல்வியைத் தொடருங்கள்.

◆ அடிப்படை ஆங்கிலம், சிங்களம், ICT வகுப்புக்கள் முற்றிலும் இலவசமாக நடைபெறும்.

◆ ஏனைய வகுப்புகளிற்கும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

(14424) நிர்வாகி

Chemistry

தனிப்பட்ட, குழு வகுப்பு களுக்கு (நேரடி, zoom) அழையுங்கள்.

S.Vasu B.Sc

077 903 5663

(14420)

வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறு வனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள் தேவை.

தொடர்பு :-

076 760 0403, 077 777 0969

(14421)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.